உளி- 1 | ஓசை-79 | டிசம்பர்-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

குடந்தை அனிதா - 4
கதிரவன் வீ - 5
மு.முபாரக் - 5
சந்துரு ஆர் சி - 6
மகேஷ் சிபி - 7
பாண்டிய ராஜ் - 8
நா.கி.பிரசாத் - 8
ஆ.சார்லஸ் - 9
அ. உமர் பாருக் - 9
பிரபுசங்கர் க - 10
ச.ஆனந்தகுமார் - 11
சே கார்கவி கார்த்திக் - 11
விஜி கல்யாணி. - 12
சீ.பாஸ்கர் - 13
சாய் மீரா - 14
அ.ஈடித் ரேனா - 15
பூங்கோதை கனகராஜன் - 15
ஹிதாயத். - 16
செ.பாலா - 17
ஜோதி சரண் - 18
குமரன்விஜி - 19
ரிஸ்கா முக்தார் - 20
சங்கரி சிவகணேசன் - 21
நயினார் - 22
அன்பு மணிவேல் - 23
மெஹராஜ்பேகம் - 23
சகா - 24
ரகுநாத் வ - 24
மகிழினி காயத்ரி - 25
ஐ.தர்மசிங் - 26
குளோரிசக்தி - 27
ஆத்மாஜீவ் - 27
செ.ரா.கிருஷ்ண குமாரி - 28
சத்யா மருதாணி - 29
கவி செல்வா - 30
பிரியா பாஸ்கரன் - 31
ஜீ.சுமித்ரா - 32
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 33
கலைச் செல்வி - 34
மேகா மிர்ஷா - 35
ஆ_முருகேசுவரி - 36
முகமது பாட்சா - 37
மணவை லைவின் - 38
தங்கேஸ் - 39

# நீர்



ஆறு நிரம்பி,
ஏரி நிரம்பி,
கண்மாய் நிரம்பி,
கரணை நிரம்பி,
தாங்கல் நிரம்பி,
ஏந்தல் நிரம்பி,
ஊரணி நிரம்பி,
குளம் நிரம்பி,
குட்டை நிரம்பியது அன்று!
இன்று???
முன் வாசல் நிரம்பி
அறைகள் நிரம்பி
நடு வீடு நிரம்பி
அடுக்களை நிரம்பி
கழிவறை நிரம்பி
முதல் தளம் நிரம்பி
வீடு மூழ்கி
நீர் கண்டது
தன் வீடு.

☞ குடந்தை அனிதா



பூ பூக்காத மரம்
தாய்மை அடைந்தது
கூடு கட்டுகிறது பறவை

☞ *கதிரவன் வீ*

தான்
பயணிக்கும் போது
மழை வேண்டாம்,
வீட்டிலிருக்கும் போது
மழை வேண்டும்,
சுயநலங்கள் நிரம்பிய உலகில் பொதுநலமாய்
பெய்துகொண்டிருக்கிறது...இம்மழை!

☞ *மு.முபாரக்*



கோயில் பிரகாரத்தில்
ஏகமாய் இறைந்து கிடக்கிறது
நிறைவேற்றும்படி விட்டுச்சென்ற
பிரார்த்தனைகள்
நடுவில்
கல் தரையில்
குழந்தையின் காலடிச் சத்தமும்
காய்ந்த சிறுநீர் தடமும்
காதலர்களின் ஓரப்பார்வையும்
தூணுக்கு மிக அருகாமையில்
நடை சாத்திய இரவின்
தனிமையில்
ஒவ்வொரு பிரார்த்தனையையும்
தபால்காரரைப்போல்
சேகரிக்கத் தொடங்கும் கடவுள்
எதற்கும் இருக்கட்டுமென்று
தன்னுடைய
கோரிக்கையையும்
வெளி வாசலில் நின்று
வைத்துவிட்டு
பூட்டிய அறைக்குள்
பழைய நிலைக்குத் திரும்புகிறார்.

☞ சந்துரு ஆர் சி



பல்வேறு வகைகளிலும்
முயற்சித்துவிட்டு கடைசியாய்
பற்களால் கடித்து
முடிச்சுகளை அவிழ்ப்பது
என் சுபாவம்
வலுவான முடிச்சுகளின் முன்பு
தோற்றுப் பழக்கமில்லையெனக்கு
உன் மனயிறுக்கத்தின் முடிச்சுகளை
அவிழ்த்தாக வேண்டும்
என்னிடம் கொடு
உன் இதழ்களை

☞ *மகேஷ் சிபி*



மழைக்கு ஒதுங்கும்
சிட்டுக்குருவியின் சிறகில்
ஒரு சொட்டு துளி

நேற்று மழை
இன்று தான் குறைந்தது
தவளைகள் சப்தம்

நீண்ட சாலையில்
முன்னதாக ஓடுகிறது
கழிவுநீர்

☞ *பாண்டிய ராஜ்*

உடலை சுத்தமாய்
குளிப்பாட்டி
கவாளம் கவாளமாய்
உணவை தந்து
பயபக்தியாய் துதிக்கையில் ஆசீர்வாதம் வாங்கி
தன்னை
கடவுளே என கன்னத்தில் போட்டுச்செல்லும்
மனிதனை தாண்டி ஏக்கமாய் பார்த்து நிற்கிறது
அந்த
கானக பிரம்மாண்டம்,
கால்களில்
சங்கிலி கட்டப்படமால்
ஊர்ந்து செல்லும்
எறும்புகளை!

☞ *நா.கி.பிரசாத்*

# பூத்தலின் நம்பிக்கை

ஆட்களற்ற வீட்டில்
உயிர்ப்புடன் இருந்து,
பூக்களாக பூத்து தள்ளுகிறது
பெற்றோர்களோடு சென்றுவிட்ட,
குழந்தை நட்டுச்சென்ற
காகிதப் பூச்செடி.

என்றாவது
வளர்ந்த குழந்தை,
மீண்டும்
வீட்டிற்கு வருமெனும் நம்பிக்கையில்,
பூத்தல் தொடர்கிறது.

☞ *ஆ.சார்லஸ்.*

வந்தமர்ந்த வீட்டின்
அடிப்பகுதியில் இருக்கக்கூடும்
மரங்களின் கல்லறை.

☞ *அ. உமர் பாருக்.*



மதம் பிடித்த மழைக்கு
புயலென்று பெயர்

விட்டு விட்டு பெய்யும்
மழைக்கு கவிதை எழுதலாம்
விடாமல் பெய்யும் மழையை
சபித்து எழுதலாம்

முழங்கால் தாண்டி
உயர்ந்து செல்லும் மழை நீர்
யாரையும் கேட்காமலே
வீட்டிற்குள் நுழைகிறது
மின்சாரத்தை நிறுத்தி வைக்கிறது

ஆமையையும் முதலையையும்
ஊருக்குள் அழைத்து வருகிறது

யானை பசிக்கு சோளப்பொரி
அடாத மழைக்கு
மழைநீர் வடிகால்கள்

நெகிழி போத்தல்களையும்
நாப்கின்களையும்
இன்ன பிற மக்காத குப்பைகளையும்
சாக்கடைக்குள் கொட்டி வைக்கும்
மேதகு மனிதர்களுக்கு

இது ஒரு பேய் மழை காலம்....

☞ பிரபுசங்கர் க



எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டிருந்தன..
அறுபத்தி நான்கு கட்டங்களுக்குள் எப்படியும்
நகரலாம்
உதவிக்கு குதிரையும் யானையும்
சின்ன சின்ன சிப்பாய்களும்..
ராணியென உணரச்செய்ய..
முடிவுகள் எடுக்கும் சுதந்திரமும் கூட
கூடுதலாக.. எதிர்பாராமல் ஒருநாள்
திடீரென வெட்டுப்பட்டது ராஜா
நிபந்தனை சுதந்திரம்..
அரசனை சுற்றியென அப்போதுதான்
புரிந்தது. மூலையில். அமரவைக்கப்பட்டேன்..
இப்போதெல்லாம் ஒரு கட்டம் கூட
தனியாக நகர விடுவதில்லை

☞ *ச.ஆனந்தகுமார்*

ஒரு கைப்பிடி மண்ணை
முந்தானையில் முடித்து
சூலம் கொண்டு
குலதெய்வத்தை
இடமாற்றிய எங்களுக்கு
மனமாறி வருவதற்குதான்
வெகுநாள் தேவைப்படுகிறது
எல்லை மண்ணில்
அமைதி காக்கும் தெய்வம் போல...

☞ *சே கார்கவி கார்த்திக்*

# தேவதை



கவுளி வெத்தலைக்கு
கணக்கா வெட்டுப்பாக்கு ரெண்டு வெச்சு ..

சுகந்த மண
சுண்ணாம்பு கூட
வச்சு ..

நைய்யா இடுச்சு
பெருவிரல்
நகக்ண்ணுலத் தோண்டி..

உருண்டை
கலவையை உதட்டோரம்
படாம
உள்ளே தள்ள..

ஒட்டிக்கிட்ட
ஏளஞ் செவப்புல
அம்புட்டு அழகா
தெரிவா
ஆச்சிக் கெழவி..

மண்ணோடு
மண்ணாகி
மாமாங்கம் ஆனாலும்..

குத்தவச்ச
அவ எடத்த
காத்துக் கெடக்குது
வெத்தல இடி உரல்
கரையான் கவ்வாம..

☞ *விஜி கல்யாணி.*

# கணக்கு வாத்தியார்



இறைவணக்கம் முடிந்த கையோடு
வந்துவிடுவார் வகுப்பறைக்குள்
நாலைந்து சாக்பீசுகளுடன்

அவருக்காகவே காத்திருந்தது போல
தயாராகவேயிருக்கும் கரும்பலகை
அவர் எழுதயிருக்கும் எண்களை
ஏந்திக்கொள்ள

வருகைப் பதிவெடுத்து முடிந்ததும்
வரிசையாக பார்த்துக்கொண்டு வருவார்
நேற்று கொடுத்த வீட்டுப்பாடத்தை

பாடத்தை முடிக்காத மாணவர்கள்
மறைத்துவைத்திருந்த மூங்கில்குச்சி
ரகசியமாக வெளியில் வரும்
முடித்துவிட்ட மாணவர்கள் துணையுடன்

உடற்கல்வி பாடவேளைகளெல்லாம்
பெரும்பாலும் மாறிவிடும்
கணிதப்பாடவேளைகளாகவே

இயல்பாகவே கணக்கு பாடத்திற்கு
பயப்படுவர்களுக்கும் எளிதில்
புரியவைப்பார் இயற்கணித பாடத்தையும்

எப்படியாவது எடுக்கவைத்துவிடுவார்
ஒவ்வொரு ஆண்டும் ஐந்தாறு சென்டங்களை

கடந்தமுறை ஊருக்கு சென்றிருந்தபோது
நண்பன் சொன்னான்
படுத்தப்படுக்கையிலிருக்கிறார்
நம் கணக்கு வாத்தியாரென்று

வீடுதேடி நேரில் சென்று பார்த்தபோது
நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார்
கடைசி காலத்திலும்

அதேநாளில் படித்த பள்ளிக்குச்சென்று
சன்னல் வழியாக வகுப்பறையை
எட்டிப் பார்க்கையில்
கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது
கரும்பலகையில் இருந்து

☞ *சீ.பாஸ்கர்*

# எனக்குப் பிடாரி என்று பெயர்



பிஞ்சென தெரிந்தும்
பிணியுடம்பை
அடக்க வழியற்று
அறம் தவறும்
ஆண்மையை எங்கேனும்
காணக்கூடின்
அங்கேயும் சொல்லிவைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

நாகரீகமெனவும்
நானும் சரி நிகரெனவும்
போலிச்சுதந்திரம் அணிந்து
போகத்தில் போதமுற்ற
பெண்மையை
அறியுமிடத்தும்
அழுந்தச் சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

பிறள் மனை
எனவறிந்தும்
பிழை பொருத்தி
அவன் அணுகி
சிதை கொழுத்தி
சிறு குடும்பக் கூட்டை
கலைத்துத் திரியும்
காதலெனும் உடைதரித்த
காலக்கூத்தாடிகளிடத்திலும்
சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

எத்தனை துணிகளை
போட்டிழுத்து
மறைத்த பின்னும்
எங்கேனும்
தெரிகிறதாவென
தேடும் கண்களுக்குச்
சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

எனக்குப் பிடாரி என்று பெயர்

☞ *சாய் மீரா*



இருளில் தேடினால்
எப்படி கிடைக்கும்
வெளிச்சத்தில் தேடு
என்கிறார்கள்.

நான் தொலைத்ததே
வெளிச்சத்தை தானே.

☞ அ.எடித் ரேனா

மணியடித்தவுடன் பதிலளிக்கும்
தேர்வுத் தாளை ஆசிரியர்
வாங்கும் வரை எழுதிக் கொண்டேஇருப்பதைப்
போலவே
இருக்கிறது
வெளியே கிளம்பும் வரை முடியாத சமையலறை
வேலைகள்

☞ பூங்கோதை கனகராஜன்



மனதிற்கு வெகு அருகில் உள்ளவர்கள்
கண்ணெட்டும் தூரத்தில் இல்லை

வெகு அருகில் இருப்பவர்கள் மனதிற்கு
நெருக்கமாய் வரவே இல்லை

எத்தனை முறை சுண்டியும் என் நாணயத்தில்
பூவோ தலையோ விழவே இல்லை

பூவும் தலையும் வீழ்வது நிச்சயம்
நடுவிலிருக்கும் எனக்காகத் தான்

இவைகளும் ஒரு நாள் குணம் மாறிக்
கொள்ளலாம் ஏதோவோர் பக்கம் முகம்
காட்டலாம்

நான் நடுவிலேயே இருந்து விடுகிறேன்
எதுவோ வீழ்கிற போது வீழட்டும்

நான் பரிசளிக்க வேண்டிய புன்னகை தளும்பிக்
கொண்டிருக்கிறது.

-

☞ ஹிதாயத்.



நின்றிருந்த யானை
நகர்ந்து செல்கிறது
மிதிபட்டிருந்த எறும்பு.


நெருப்பு வரையும்
நறுமண ஓவியம்
ஊதுபத்தி புகை.

படிப்படியாய் மேகங்கள்
கீழே இறங்குகிறது
கால்களற்ற மழை.

விவசாய நிலம்
வெடிப்பு வெடிப்பாக உள்ளது
உழைக்கும் கால்கள்.

மீன் குழம்பு
வாசம் வீசுகிறது
அம்மாவின் கைமணம்.

☞ செ.பாலா



அலாதி பிரியங்களுடன்
பறக்க விடும் பட்டங்கள்
தலை மேல் வைத்துக்
கொண்டாடினாலும்
நூல் பிடித்த உள்ளங்கையை
கீறிவிடக்கூடும்!!

வண்ணமும் வடிவமும்
மனதோடு ஒட்டிக்
கொண்டிருக்கும்
வானோடு பறந்து கொண்டிருக்கும்
பட்டங்களுக்கு நூலிற்கு பதில்
இறகு வரைந்து கொடுக்கிறேன்!!

பறக்கட்டும் அது
விரும்பிய விதமாய்
திரும்பும் திசையில்
பெரும் உயரத்தில்
ராஜாளியாக!!

தொலைதூரம் போவதெல்லாம்
தொலைந்துவிடுவதில்லை!!

நிழல் தந்து கனியும் தந்து
கிளை கொண்டு தாலாட்டும்
மரங்களை உணர்ந்த பறவை
மீண்டு வரும்
மீண்டும் வரும்

☞ *ஜோதி சரண்*



அங்கேயே நிற்க முடியவில்லை
மரத்துவிடுகின்றன கால்கள்.

நீளும் சாலைகள்
அழைத்துச் செல்கையில்
மரங்களோடு வலிகளும் கடப்பதைக்
காண்கிறது
தனிமன ஆந்தை.

நேராக சென்று வளைகிறான்.
வளைந்து சென்று நேராகிறான்.

ஏனோ அமைகிறது
தேங்காத மழை நீரோடி கவிதை படியும்
நிலப்பரப்பு உள்ளம்.

ஒரு பறவைக்கு அளிக்கப்பட்ட
மைல் கற்களில் பல வான நாட்கள்
அமர்ந்து செல்கின்றன.

பறவைகள் போவதெல்லாம்
தூரமான தூரங்களை கடந்து.

கிழக்கே மழை பெய்தால்
மேற்கு மலை சென்றுவிடும்
மேற்கே மழை பெய்தால்
கிழக்கு மலை வந்துவிடும்
இந்தப் பட்டாம்பூச்சிக்கு
இதுவே எளிய ஜீவனம் .

☞ *குமரன்விஜி*



யாருமில்லாதவர்கள் தன்னைத்தானே
காத்துக்கொள்கிறார்கள்
யாருமில்லாதவர்கள் தன்னைத்தானே
ஆற்றிக்கொள்கிறார்கள்
யாருமில்லாதவர்கள் தன்னைத்தானே
அணைத்துக்கொள்கிறார்கள்

எனக்கு யாருமே இல்லை என
அங்கலாய்த்துக்கொள்கிறார்கள்
உண்மையில்
யாருமே இல்லாதிருப்பவர்கள்
தம் உலகங்களில் எவ்வளவு மகிழ்வாக
இருக்கிறார்கள் என்பதை
அறியாதவர்கள்

எனக்கு யாருமே இல்லை என
அங்கலாய்க்கிறார்கள்

உண்மையில்
யாருமே இல்லை என்பது
வலி மட்டுமல்ல
சமயங்களில்
அது ஒரு நிம்மதி
ஒரு விடுதலை
ஓர் ஆறுதல்

பின்னும்
வெற்றிக்களிப்பை பகிர்ந்திட
அல்ல
தோற்றுத்திரும்புகையில்
எல்லாம் உன்னால்தானென
பழிசுமத்தி ஆறுதல்
அடையவேனும்
நமக்காய் நமக்கென யாரேனும்
இருந்தால் நலமெனும்
சிறு மனக்குறையைத்தவிர
யாருமில்லாதிருப்பதில்
யாதொன்றும்
குறைவில்லை

*ரிஸ்கா முக்தார்-*



திறக்கப்படாத
பரிசுப்பொருட்கள் போல
ஆர்வமும் அவஸ்தையும்
நிறைந்தவைதான்
இந்த வாழ்க்கை..

ஒவ்வொரு நாளும்
ஒரு நட்பை
ஒரு காதலை
ஒரு துரோகத்தை
ஒரு ஆச்சர்யத்தை
ஒரு நம்பிக்கையை
ஒரு புறக்கணிப்பை
தரக்காத்திருக்கிறது..

நேற்றையைப் போல
ஒரு மகிழ்வையோ
ஒரு சலிப்பையோ
அல்லது
ஏதோவொன்றை
அனுபவமாகத் தந்துவிடுகிறது..

இன்பமோ துன்பமோ
உரக்கக்கத்தி கண்ணீர் சிந்தும்
ஒரு தனிமைப் பொழுது
எல்லோருக்கும் ஒருமுறையேனும்
இந்த வாழ்க்கை தந்துவிடுகிறது..

குளியலறையில் அழுது அடங்கிய
உள்ளத்தின் அமைதி போல
மரணத்தின் வெம்மையை
தணித்துச் செல்லும் அந்தப்பொழுதுகள்
ஒரு ஞானநிலையாக வாய்த்துவிடுகிறது..

☞ *சங்கரி சிவகணேசன்*



ஒரே நேரத்தில்
மௌனத்தையும் இரைச்சலையும்
வரையச் சொன்னாய்
சாமியோடு
கோயிலை வரைந்தேன்

ஒரே நேரத்தில்
நல்லதையும் கெட்டதையும்
வரையச் சொன்னாய்
அலைபேசியை வரைந்தேன்

ஒரே நேரத்தில்
இரவையும் பகலையும்
வரையச் சொன்னாய்
கண்களை வரைந்தேன்

ஒரே நேரத்தில்
ஊடலையும் கூடலையும்
வரையச் சொன்னாய்
கடற்கரையை வரைந்தேன்

ஒரே நேரத்தில்
இன்பத்தையும் துன்பத்தையும்
வரையச் சொன்னாய்
என்னவளே
உன்னையும் என்னையும்
தனித்தனியாக வரைய
சற்று தயக்கமாகவே இருக்கிறது எனக்கு

☞ *நயினார்*

# கரையேறுதல்



கால் நனைக்கக் கற்றுத்தந்த
அந்தக் கரையில் தான்
கடந்து போகவும்
கற்றுத் தந்திருந்தது
அலை.

நனைவதும்
நனைந்தபின் உதறுவதுமாய்
அதுவொரு
ஆகப்பெருங் கலை.

☞ *அன்பு மணிவேல்*

ஆளில்லாத பரிசல்களை அக்கரைக்கும்
இக்கரைக்குமாய் பயணிக்க விடுகிறாள்
கண்மலரென்னும் பெயரில்
அந்த நீள விழிக்காரி_______

☞ *மெஹராஜ்பேகம்*



உங்கள் கண்களுக்கு
நேராகத் தெரிந்த ஒன்று
என் கண்களுக்கு
கோணலாகத் தெரிய
வாய்ப்பு உண்டு தானே...!?
அப்படியானால்,
சரியும் தவறும்
முரண்பட்டு தானே நிற்கிறது
அவரவர் விழிகளில்
அவரவர் பார்வையில்...

☞ சகா

சற்றுமுன் நீங்கள்
தாவிக்குதிக்கும்வரை
அந்தக் கிணற்றில்
ஒரு நிலாவும் ஒரு வானமும்
கூடவே அமைதியும்
இருந்தன!

☞ ரகுநாத் வ



எல்லோரும்
அவரவர்
கடவுள்களிடம்
பேசிக்கொண்டு
இருக்க

நானோ
அவர்கள்
பேசுவதையே
பார்த்துக்
கொண்டிருந்தேன்

அந்த நொடி
ஒரு நெய்விளக்காய்
மாறியது மனம்

இருள்
அகல
இந்தச்
சிறு சுடர்
போதுமெனக்கு

☞ மகிழினி காயத்ரி



பாயும் ஆற்றில்
எதிர் நீச்சல் போடும்
மீனும்

வீசும் காற்றில்
எதிராகப் பறக்கும்
பறவையும்

சலித்துக் கொள்வதில்லை
சாதனை என
சப்தமிடுவதும் இல்லை

அந்திம காலம் வரை
அகப்படும் பொழுதுகளை
அதனதன் போக்கிலேயே
அழகாக
வாழ்ந்து விடுகின்றன...

☞ *ஐ.தர்மசிங்*



ஒரு பெருமழைக்குப்
பிறகுதான்
ஆறுகள் தெரிந்துகொள்கின்றன
தங்களின் கொள்ளளவை
வீடுகள் புரிந்துகொள்கின்றன
தங்கள் மட்டத்தை
மரங்கள் வெளிப்படுத்துகின்றன
தங்கள் உறுதியை
எல்லாவற்றுக்கும்
மேலாக
மனிதர்கள் உயிர்ப்பிக்கின்றனர்
தங்கள் மனிதத்தை.

☞ *குளோரிசக்தி*

சலனமற்ற நதியின் மீது
நடக்கத் துவங்குகிறேன்
எனக்கு முன்னால்
ஒரு ஜோடி பாதங்கள்.

☞ *ஆத்மாஜீவ்*



அம்மாவின் கைவிரல் துளையில்
வெந்த இட்டிலியில்
அன்பு நிறைந்திருக்கிறது

அவள் விரல்களின் தடங்கள்
பதித்த ராகி ரொட்டியில்
கைமணம் வீசிக்கொண்டிருக்கிறது

கடாயில் சோற்றை பிரட்டி
உருட்டிக் கொடுத்த உருண்டைகள்
நினைவடுக்கில் உருண்டு கொண்டிருக்கிறது

அம்மாவின் முதுகில் சாய்ந்து
அரைத்த மசாலாக்களின் வாசம்
அன்பை தூவிக் கொண்டிருக்கிறது

அவள் வைக்கும் மிளகு குழம்பில்
இருமலின்றி கடக்கலாம்
மழைக் காலத்தை
அவள் தரும் நீர்மோரில்
வெக்கையின்றி கடக்கலாம்
வேனிற் காலத்தை


கைபடாமல் சமைக்கும்
இயந்திர உணவுகள்
வயிற்றை நிரப்பலாம்
மனதை நிறைப்பதில்லை

☞ *செ.ரா.கிருஷ்ண குமாரி*



எல்லா வகையிலுமாக வாழத்தோன்றுகிறது..
மேகங்களை குழைத்து பூசி ஓர்நாள்..
நிலவை ஆடைநெய்ந்து அணிந்து ஓர்நாள்..
தூரத்து பச்சைபசேல் மலைகளை அள்ளி
கொண்டையில் வைத்து ஓர்நாள்..
விண்மீன்களை பருக்களாக்கி ஓர்நாள்..
தேநீர் கடை கல்லாபெட்டியாக சிரித்து ஓர்நாள்..
வனங்களை கூறும் போடும் தார்சாலை
நிறமாய் ஓர்நாள்..
கனவுகள் கண்டு மலங்க மலங்க விழித்தெழும்
குழந்தையாய் ஓர்நாள்..
சில்லறை குலுக்கும் நடத்துனராய் ஓர்நாள்..
சில்வண்டுகொரியாய் பறந்து ஓர்நாள்...
மகரந்தப்பூக்களை தின்று ஓர்நாள்..
விட்டில் பூச்சியாய் விளக்கில் விழுகாமல்
ஓர்நாள்..
ஒவ்வொரு படியாய் குதித்தோடும் தவளையாய்
ஓர்நாள்..
யார் மனங்களையும் கொன்று பேசாது ஓர்நாள்..
தட்டேதி “லொட் லொட்” என யாசகம்
பெறுபவளாய் ஓர்நாள்...
கண்களில் புன்னகையை சுமந்தே பார்பவளாய்
ஓர்நாள்..
மின்சாரம் துண்டித்துப்போன மின்விசிறியாக
ஓர்நாள்..
இரவு சவாரிக்கு காத்திருக்கும்
ஆட்டோ ஓட்டுனராய் ஓர்நாள்..
முகவரி தொலைத்தவர்வளுக்கு கைக்காட்டி
மரமாக ஓர்நாள்...
எல்லோரும் கன்னம் கிள்ளும்
ஜாமூன்காரியாய் ஓர்நாள்..
ச்சீ...! என்று வெறுக்கப்படுபவளாய் ஓர்நாள்..
எனக்காகவே அன்பினால் தரப்பட்ட புல்லாக்கு
தரித்தும் ஓர்நாள்..
எப்படியேனும் மகிழ்வாக வாழ்ந்து
விடுகிறேனே எனது காலம் முடிவதற்குள்...

☞ *சத்யா மருதாணி*



தொண்ணூறுகளில்
நீண்ட தூர
பாதயாத்திரைக்குப் பின் தான்
என் பள்ளிக்கூடம் வரும்

இரண்டு ஏரிகள்
ஒரு வாரி
இரண்டு சுடுகாடுகள்
இரு புறமும் கருவ காடுகளை
கடந்துதான் பள்ளிக்குப்
போக வேண்டும்

இதற்கிடையில்
ஆடு மாடுகளும் நம்
பாதையில் தான் நடந்து வரும்

ஐய்யப்ப மாலை போட்டவர்கள்
எதிரே வந்தால்
தீட்டாய் இருந்தால் அவர்களை
திரும்பிப் பார்க்க கூடாது என்பது
என் பாட்டி போட்ட சட்டம்

பள்ளிக்கூடத்திற்குள்
நுழையும் போதே
காலையில கஞ்சி குடிச்சியா
என்ற அவனின் கேள்விக்கு

ம் குடிச்சேன் என்ற
பொய்யைத்தான் பசியோடு
சொல்லியிருக்கிறேன்

அதே அழைப்பு
அதே குரல்
அதே கரிசனை
அதே காதல்

இத்தனை ஆண்டுகளுக்குப்பின்

இந்த முறையும்
நலமா? என்ற அவன் கேள்விக்கு
நலம் என்ற பொய்யை தான்
சொல்ல முடிந்தது என்னால்.

☞ *கவி செல்வா*

# அன்பின் நிழல்



நீ காதலித்தவரின்
சாயலைக் காணுபவரிடமெல்லாம்
கவனம் செலுத்துகிறாய்

நூறு பேரை கலீர் சிரிப்பிலும்
ஆயிரம் பேரை
மெசன்ஞரிலும் இன்ஸ்டாகிராமிலும்
கால அட்டவணையிட்டு
கட்டிப்போடுகிறாய்
வார்த்தையெனும் மயக்க மருந்தில்

வந்தேறிகளாய் உன்மனதில்
குடிபுகுந்திருப்பவர்களை ஆராதிப்பதில்
உனக்கு நிகர் எவருமில்லை

பித்தாக்கி பித்தாகிறாய்
ஆழ்நிலை தியானத்தில்

கெட்டவன் எனச்சொல்லி
விலகி நின்றும் தள்ளி வைத்தும்
புறக்கணித்தும்
ஓட எத்தனிக்கிறாய்

மிதியடியில்
காலணி புழுக்கையாய்
உதறித்தள்ளும் உன் மீதில்
அன்பின் நிழல் மொத்தமாய்ப்
படியக் காரண காரியம்
எதையும் அறிந்திருக்கவில்லை
அறியத் தேவையுமில்லை
நிற்க

பிடிக்காத
அத்தனை குணங்களும் நிரம்பியிருக்கும்
உன்னை மட்டும்
பிடித்துதானிருக்கிறது.

☞ *பிரியா பாஸ்கரன்*



நேசத்தின்
நிறம்தேடி வெகுதூரம் வந்துவிட்டேன்
இன்னும்
தென்படவில்லை

மரக்கிளையில் மறைந்திருக்கும்
பச்சோந்தி
அதற்கிடையில்
தன்
சந்ததியைப்
பெருக்கிக்கொண்டது

நம் கைகளுக்குள்
வாகாய் இறுகப்பற்றி
அறுத்தெறியும்
கோடரிக் காம்புகள்
பல மரங்களை அதற்கிடையில்
தறித்துச் சரித்தன

இன்னும்
கண்களுக்குப் புலப்படவில்லை
காற்றைப்போல்
என்னை மெதுவாய்
வருடிக் கொடுத்தபடி
துரோகம் ஒன்று
தள்ளி வீழ்தியதை
உணர்கிறேன்

மண்ணை
உண்டு தீர்த்து
அதில் வீடுகட்டி
வாழ்ந்து கழி(ளி)க்கும்
கறையான்களைப்போல்
பல கறையான்கள்
மண்போல் என்னைத்
தின்று தீர்ந்துவிட்டன

இன்னும் அந்த
நேசத்தின்
பெரும்பற்றுதலை
தேடிக்கொண்டே இருக்கிறேன்
நீங்கிக்கொண்டே
இருக்கிறேன்
ஆனாலும்
நீங்க முடியாமல்
இறந்தகால எச்சங்கள்....ஃ

☞ *ஜீ.சுமித்ரா*



எங்கள் தாத்தா
மாங்குடியில் இருந்து
சைக்கிளில் வரும்வரை
காத்திருப்போம்
சீனி மிட்டாய்க்கும் காரச்சேவுக்கும்
எப்போதுமே மாலையில் நடக்கும்
சனி ஞாயிறுகளில் மதியமென்றாலே
தாத்தாவோடதான்
தயிரில் உப்பு போட்டு குண்டு மிளகாய்
காரத்தில் சாப்பிட சாப்பிட
எல்லாம் காலியாகும்
தாத்தா சாதத்தோடு தயிரை ஊற்றி
கலக்கும்போதே வாசனையாய்
பக்கத்து வீடுவரை மணம் சேரும்

ஒருவேளை விளையாடிருந்தால் ஓடி
வருவோம் தாத்தா கையில் அரைக்கப்பட்ட
தயிர்சாதத்துக்காய்
இப்படியாய் ஓடிப்போயின
முப்பத்தாறு வருடங்கள்.....

ஆறு மாதம் முன்
பெயரன் இடம் பெயர்ந்தான்
தலைநகருக்கு....

இப்போது அந்த மணத்தை
பற்றிக்கொண்டது....
ஒரு பூனை!

☞ *வீரசோழன்.க.சோ. திருமாவளவன்*

# கடல்மீன்கள் விற்பனைக்கு



கடலே நீ எனக்கு வாழ்வளித்தாய்..
கடலே நீ என்னை
ஏற்றுக் கொண்டாய்...
கடலே என்னை ரசித்தாய்..
கடலே உன்னால் நான் நிறைவானேன்
கடலே நான் உன் குழந்தை
கடலே நீ என் தாய்...

கடலே கடைசியாக என்னை நீ கைவிட்டும்
விட்டாய்.
இரு கொஞ்சம் உப்புத் தண்ணீரைக் குடித்துக்
கொள்கிறேன்..

குடித்துக்கொண்டது.
துப்பியது
பின் மறுபடி குடித்தது
நிம்மதியாக வலைக்குள்
அடங்கியது....

கண்ணுக்கு எட்டிய
தூரம் வரை
விரிந்திருந்த கடலை பதட்டத்தோடு பார்த்து
அவசர அவசரமாக விழுங்கியது
இரண்டு கண்களும் நிரம்பி வழிந்தாலும்
போதவில்லை..
அலைமோதியது
வழிதேடியது....

நிலைகுத்திய
இரண்டு கண்களையும்
கொஞ்சம்
உப்புத் தண்ணீர் குடித்து
உப்பிய வயிற்றையும்
மறக்க முடியாமல் போனது
இப்படியாயிமிருக்கலாம்


☞ *கலைச் செல்வி*



பேசிக்கொண்டே பொடிநடையாய்
கொஞ்சம் கொஞ்சமாய்
பறந்து போய்க் கொண்டிருக்கும்
ஒரு காட்டை அடைந்தோம்
அழகான மலர்களை
அமைதியான விலங்குகளை
ஒவ்வொரு முத்தத்தின் இடையிலும்
ஒவ்வொன்றாய் கண்டோம்.
ஆடவும், ஓடவும்
விலங்குகள் உண்டு,
பாடும் பறவைகள் எங்கே!
பாடும் பறவையை எங்ஙனம் தேடுவது
தேடத் தேட காடு எங்களை விட்டு
தூரமாகிறது.
எல்லா உறுப்புகள் இருந்தும்
உயிர்த்துடிப்பு இல்லாத இக் காட்டுக்கு
முதலில் ஒரு பாடும் பறவையை
உருவாக்க வேண்டும் என்றான்
ஒரு முழுமையான காடு
தனக்கான உயிர்களை
தாமாகவே கருவுறும்
நாம் முதலில்
உருவாக்க வேண்டியது
பறவையை அல்ல
ஒரு காட்டை.

☞ *மேகா மிர்ஷா*

# அதிகமாக ஒன்றுமில்லை



நித்தம் ஒரு பூ
நினைவில் ஒரு இருப்பு
யுத்தம் செய்ய கொஞ்சும்
ஊசியான சொற்கள்..
பிரியாத பிரியத்தின்
கோப்பையில் ஒரு தேநீர் ..
நெகிழ்வான இதயத்தில்
மக்காத நெகிழியாய்
மகிழ்வாக வாழ
முகில்களால் ஒரு கூடாரம்..
நூலகமாக இல்லாமல்
குழந்தை கையில்
பொம்மையாய்
சில மணித்துளிகள்..
உள்ளங்கை ரேகை
தீண்டாத ஒரு இறுக்கம்..
முத்துப்பற்கள்
எட்டிப்பார்க்க மெதுவாக
கூசிடும் மயிலிறகு
தருணங்கள்..

இவ்வளவு போதும்..
நூற்றாண்டின் ஒரு நொடியைக்
கடந்திட..!

☞ ஆ_முருகேசுவரி



ஒழுங்கற்றப் பாடலை
அவன் பாடிக் கொண்டேயிருக்கிறான்.
நாற சங்கீதத்தை
நல்ல சங்கீதம் என்று
விற்றுக் கொண்டாடுகிறார்கள்.
ஒத்து ஊதுகிறவன்
தன்னை மேய்ப்பனிடம் ஒப்படைத்து விட ....
ஸ்ஸ்ஸ்வரம்
தன் கூட்டை விட்டவிழ்ந்து
அபஸ்வரத்தில் ஓநாய்கள் ஊளையிடுகின்றன.
இடுகாட்டின் மௌனத்தை
இடைவெளிகள் புசிக்கும் போதெல்லாம்
கதறல்கள்
இசைத்தட்டில் சேர்ந்து கொள்கின்றன.
காலத்தைத் தின்றும்
சீரணிக்காதப் பசி எப்போதுமே ஓநாய்களிடம்
அடைக்கலம் தேடுவது
உச்சஸ்தாயின் ஆறாத ரணம்தான்.

*முகமது பாட்சா*



மூச்சிரைக்க நிற்கும் மந்திரவாதியின் முன்
மண்டியிட்டு நிற்கிறாள் மூக்காயி மகனை
காப்பாற்ற

ஒற்றை பனைமரத்தின் அடியில்
அமாவாசை இரவில் அகோரப்பேய்
பிடித்துவிட்டதாக

வெள்ளிக்கிழமை சாமத்தில்
மயானம் அருகில் நடந்து வந்த
மரியம்மாவின் மகனை மந்திரிக்க
பாதிரியாரின் பாதத்தை தொட்டு கெஞ்சுகிறாள்

சலீமின் முக்குத்தெரு பூதரசமரத்தில்
மாலை ஆறுமணிக்கு மேல் ஊஞ்சலாடிய
அப்துல் காதரை
மசூதிக்கு அழைத்து வந்திருந்தான்
ரசூல் முகைதீன்

கடைசிவரை ஒருவர் கூட எங்கேயும்
எப்போதாகிலும்

கடவுள் பிடித்துவிட்டதாக சொல்லவே இல்லை

☞ *மணவை லைவின்*

# அருகண்மை



உன் வீட்டு முற்றத்தில் நிற்கும்
துளசி செடியில்

உதிர்ந்து விழும் ஊது பத்தி சுருளில்

சமையலறையின் புகைபடிந்த
கறைகளில்

சிறகடிக்கும் எதிர் வீட்டுப்புறாக்களின்
இறகுகளில்


சுவாசம் உதிரும்
ஏகாந்தமான இடத்தில்

ஒரு துடிப்பிற்கும்
மறு துடிப்பிற்குமான
இரகசிய இடைவெளியில்

அடுத்த நிகழ்விற்கும்
அடுத்த நிகழ்விற்குமான
இடைவெளியில்

மேலும் இந்த கவிதைக்குள்
என நீ
இருக்கும் இடத்திலெல்லாம்
எப்போதும் நானும் இருக்கிறேன்
துணையே

☞ *தங்கேஸ்*


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI